| Name of the newspaper | Dina Thanthi |
| --- | --- |
| Date | September 11, 2015 |
| Event | World Duchenne Awareness Day 2015 |

## கோவையில்

# தசைச்சிதைவு நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்

கோவை, செப்.11-

நாட்டில் அதிகரித்து வரும் தசைச்சிதைவு நோய் மற்றும் தண்டுவட தசைச்சிதைவு நோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம், கோவை-அவினாசி ரோட்டில் உள்ள ஜென்னி கிளப்பில் நடைபெற்றது. இதற்கு எம்.டி.சி.ஆர்.சி. என்ற தொண்டு நிறுவன தலைவர் டாக்டர் லட்சுமி தலைமை தாங்கினார்.

கருத்தரங்கில் மருத்துவத்துறை நிபுணர்கள் கிருஷ்ணகுமார், ராமசாமி, சுவர்கா அமைப்பின் நிர்வாகி சுவர்ணலதா ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இதில் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை மருத்துவ நிபுணர்கள் வழங்கினார்கள். கருத்தரங்கின் ஒரு பகுதியாக குழந்தைகளை மகிழ்விக்கும் மாயாஜாலம், பொம்மை கார் பந்தயம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.